**COPY OF DEPOSITION**

**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT COURT, ERODE**

**CROSS EXAMINATION OF PW1**

**O.S.** 248/2012

**PW1**

நாள் 20-02-2019.

**சாட்சி இன்று ஆஜர். சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை மேற்கொள்ளப்படுகிறார்.**

<u>7 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை ..</u>

எனக்கு பூர்வீக ஊர் சீரங்கம்பாளையம். தாவா சொத்துக்கள் முகாசிப் பிடாரியூரில் உள்ளது. பிடாரியூருக்கும், சீரங்கம்பாளையத்திற்கும் சுமார் 15 கி.மீ தூரம் இருக்கும். எனக்கு தாவா சொத்துக்களில் 4 ல் 3 பாகம் கேட்டு தாவா பரிகாரம் கேட்டிருக்கிறேன். பாகப் பிரிவினை மற்றும் யாரும் இடையூறு செய்யக்கூடாது என்று கேட்டிருக்கிறேன். வேறு பரிகாரம் எதுவும் கேட்கவில்லை. தாவா சொத்திற்கு பக்கத்தில் வேறு சொத்து எதுவும் எனக்கு இல்லை. எனக்கு பாத்தியப்பட்ட பூர்வீக சொத்துக்கள் சீரங்கம்பாளையத்தில் உள்ளது. 2 முதல் 4 பிரதிவாதிகள் 1 ம் பிரதிவாதியின் வாரிசுகள் என்றால் ஆமாம். 5 ம் பிரதிவாதி சாந்தி 2 ம் பிரதிவாதி லோகநாதனின் மனைவி. 6 ம் பிரதிவாதி தேவராஜ் எனக்கு அறிமுகமானவரா என்றால் இல்லை. தெரியாது. நான் கிரையம் பெற்ற பின்னர்தான் 7 ம் பிரதிவாதி எனக்குத் தெரியும். தாவா சொத்தின் புதிய எண். 425/1 ஆகும். அதன் பழைய எண் 33, 56 மற்றும் 57 என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. 425/1 ன் மொத்த விஸ்தீரணம் என்ன என்று கேட்டால் 12 ஏக்கர் இருக்கும். அதில் 4 பேருக்கு பாகம் உண்டு. அதில் 1 ம் பிரதிவாதி வகையறாவிற்கு வரவேண்டியது 3.33 ஏக்கர் விஸ்தீரணம். சர்வே எண்.425 ல் எனக்குத் தெரிந்து எந்த உட்பிரிவுகளும் இல்லை. என்னுடைய கிரையப் பத்திரத்தில் 425/1 என்று எழுதப்பட்டிருந்தால் அது தவறா என்றால் தவறில்லை. கிரையம் வாங்குவதற்கு முன்னர் உட்பிரிவு செய்யப்பட்டிருந்தா என்று தெரிந்து வாங்கினேனா என்றால் உட்பிரிவு செய்யப்படவில்லை என்று என் கிரையதாரர்கள் சொன்னதை நம்பிதான் நான் கிரையம் வாங்கினேன். உட்பிரிவு செய்யப்பட்டுள்ளா என்று வருவாய்த்துறை ஆவணங்களை பரிசீலித்து நான் வாங்கினேனா என்றால் இல்லை. தாவா சொத்தை கிரையம் பெற இடைத்தரகர் இல்லை. 1 மற்றும் 4 பிரதிவாதிகள் நேரடியாக பேசி கிரையம் செய்து கொடுத்தார்கள். கிரையத்திற்கு முன்பாக கிரைய ஒப்பந்தம் எதுவும் போட்டுக் கொள்ளவில்லை. 2009 ம் ஆண்டு 1 மற்றும் 4 பிரதிவாதிகளிடம் கிரையம் வாங்கினேன்.

கிரையத்திற்கு முன்பாக அட்வான்ஸ் எதுவும் கொடுக்கவில்லை. கிரையத்திற்கு முன்னர் 3 ஏக்கர் 33 சென்ட் சம்மந்தமாக வில்லங்கச் சான்று எதையும் நான் பார்க்கவில்லை. கிரையம் பெறுவதற்கு முன்னர் வில்லங்கச் சான்றிதழ் பார்த்து வாங்க வேண்டும் என்ற விபரம் எனக்குத் தெரியுமா என்றால் 1 மற்றும் 4 பிரதிவாதிகள் மீது இருந்த நம்பிக்கை காரணமாக நான் பார்க்கவில்லை. வழக்கு தாக்கல் செய்த பின்னர் நான் வில்லங்கச் சான்று பார்க்கவில்லை. தாவா சொத்தில் 425 ல் 2 கிணறுகள் உள்ளது. 2 கிணறுகளிலும் 1 ம் பிரதிவாதிக்கு 4 ல் 1 பாகம் பாத்தியம் உண்டு. அதையும் சேர்த்துதான் கிரையம் செய்தேன். 2 கிணறுகளிலும் மோட்டார் உண்டு. தற்போதைய நிலையில் 2 கிணறுகளின் சர்வீஸ் கனெக்சன் யார் பெயர்களில் உள்ளது என்று எனக்கு குறிப்பாகத் தெரியாது. 2009 ல் நான் கிரையம் பெற்ற 3 ஏக்கர் 33 சென்ட்டிற்கு மூலப்பத்திரம் பார்த்தேன். 1985 ம் ஆண்டு 1 ம் பிரதிவாதி மற்றும் அவரது சகோதரர்கள் பாகப் பிரிவினை செய்து கொண்டார்கள். என்னுடைய கிரையப் பத்திரத்தில் மூலப்பத்திரத்தின் விபரம் சொல்லியிருக்கிறேனா என்று ஞாபகம் இல்லை. பத்திரப் பதிவின்போது மூலப் பத்திரத்தை பார்த்தேன். அதன் ஜெராக்ஸ் நகலை எனக்கு காட்டினார்கள். அவர்கள் 4 பேர்களில் ஒருவரிடம்தான் அசல் பத்திரம் இருந்தது. கிரையத்தின்போது எனக்கு மூலப்பத்திரத்தின் ஜெராக்ஸ் நகலை காட்டினார்களா, சான்றிட்ட நகலை காட்டினார்களா என்று ஞாபகம் இல்லை. கிரைய தேதியில் மூலப்பத்திரத்தின் நகல் எதையும் நான் வாங்கிக் கொள்ளவில்லை. கிரையத் தொகை முழுவதையும் கொடுத்துவிட்டேன். பின்னிட்டு வில்லங்கம் ஏதாவது வரும் என்று நான் கிரையத் தொகை எதையும் நிறுத்தி வைத்துக் கொள்ளவில்லை. 1985 மூலப் பத்திரத்தில் ABCD என 4 செட்யூல் பிரிக்கப்பட்டு D செட்யூல் 1 ம் பிரதிவாதிக்கு கொடுக்கப்பட்டிருந்ததை தெரிந்து கொண்டேன். மற்ற செட்யூல்கள் யார் யாருக்கு எவ்வளவு பிரிந்தது என்று நான் தெரிந்து கொள்ளவில்லை. 1985 க்கு பின்னிட்ட 1 ம் பிரதிவாதிக்கு ஒதுக்கிய செட்யூல் சொத்து அவர் குடும்பத்திற்குள் பின்னிட்டு ஏதேனும் கறார் நடந்ததா என்றால் இல்லை. 1985 ம் தேதிய மூலப் பத்திரத்தில் 1 ம் பிரதிவாதிக்கு பிரியும் சொத்தைப் பொறுத்து அவர் குடும்பத்திற்குள் வாய்மொழி பாகம் ஏற்பட்டது என்று சொன்னால் இல்லை. 1987 ம் ஆண்டே 1 ம் பிரதிவாதி குடும்பத்திற்குள் வாய்மொழி பாகப்பிரிவினை ஏற்பட்டது என்று சொன்னால் அது பொய். அதுபோல் எதுவும் ஏற்படவில்லை. அதன் அடிப்படையில் 28.03.2003 ல் பெரியசாமி தனது மகன் லோகநாதனுக்கு தானசெட்டில்மென்ட் எழுதினார் என்றால் சரிதான். அதே தேதியில் 3 ம் பிரதிவாதி 2 ம் பிரதிவாதிக்கு எழுதியிருக்கிறார் என்ற விபரம் தெரியுமா என்றால் அது செட்டில்மெண்ட் இல்லை. விடுதலைப் பத்திரம். செட்டில்மெண்ட் பத்திரம், விடுதலைப் பத்திரம் பற்றி 20.07.2009 ம் தேதி நான் கிரையம் பெறும்போது தெரிந்து கொண்டேன். 1 ம் பிரதிவாதி தன் மகன் 2 ம் பிரதிவாதிக்கு ஒரு செட்டில்மெண்ட் ஆவணம்

எழுதியதாகவும், ஆனாலும் தானும், தனது மகனும் கூட்டுக் குடும்பமாக வசித்து வருவதால் அந்த செட்டில்மென்ட் நடைமுறைக்கு வரவில்லை என்றும், அதனால் அதை இரத்து செய்வதாகவும் சொல்லி இரத்துப் பத்திரத்தையும் எனக்குக் கொடுத்தார். 2009 கிரையத்தின்போது நான் இரத்துப் பத்திரத்தை வாங்கிக் கொண்டேன். தானசெட்டில்மென்ட், விடுதலைப் பத்திரம் தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் ஞாபகம் இல்லை. மேற்படி பத்திரங்களை இரத்து செய்ததாக நான் வழக்கிற்காக பொய்யாகச் சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் கிரையம் பெறும்போது கிரைய பத்திரத்தில் இரத்து பத்திரம் பற்றி கண்டுள்ளதா என்று ஞாபகம் இல்லை. அவ்வாறு பத்திரத்தில் இல்லை என்றால் இல்லை என்றுதான் எடுத்துக் கொள்ள வேண்டும். 2009 மற்றும் 2012 ஆண்டுகளில் நான் மொத்தம் 2 கிரையங்கள் வாங்கியிருக்கிறேன். அது பொதுச் சொத்து என்பதால் நான் எனது கிரையத்தின்போது அளந்து பார்க்கவில்லை. 2ம் பிரதிவாதி லோகநாதன் 7ம் பிரதிவாதி குப்புசாமிக்கு கிரையம் கொடுத்த பின்னர் நான் 7ம் பிரதிவாதியிடம் சமாதானம் எதுவும் பேசவில்லை. 29.12.2008 ம் தேதி ஒரு பதிவு செய்யப்படாத கிரைய ஒப்பந்த பத்திரம் லோகநாதனும், குப்புசாமியும் ஏற்படுத்தி இருந்தால் அது பொய். எனக்கு தெரிந்து அதுபோல் ஆவணம் ஏற்படவும் இல்லை. எங்களுக்குள் 3 வழக்குகள் நிலுவையில் உள்ளன. தாவா சொத்தைத் தவிர வேறு எந்தச் சொத்தும் அந்தக் கிராமத்தில் நான் கிரையம் வாங்கவில்லை. சுவாதீனம் எடுக்கப்பட்டதாக பத்திரத்தில் எழுதவில்லை என்றால் அதுபற்றி எனக்கு ஞாபகம் இல்லை. 7 ம் பிரதிவாதியின் கிரையப் பத்திரத்தை நான் பார்த்துள்ளேன். அவர் செக்குபந்தி கண்டுதான் கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். 7ம் பிரதிவாதியின் கிரையத்திற்கு பின்னர் பட்டா மாறுதல் செய்துள்ளார் என்றால் அவரும் விண்ணப்பித்திருந்தார். நானும் விண்ணப்பித்திருந்தேன். வழக்கு நிலுவையில் இருப்பதால் இப்போது வரை யாருக்கும் பட்டா வழங்கப்படவில்லை. அதற்கு வருவாய்த் துறையில் சான்று எதுவும் கொடுக்கவில்லை. இன்றுவரை கிஸ்து எதுவும் கட்டவில்லை. வழக்கு முடிந்தபின்னர் கட்டிவிடுவேன். நான் வாங்கிய 2 கிரையப் பத்திரங்களையும் எழுதியது ஒரே நபர்தானா என்றால் ஞாபகம் இல்லை. 2 பத்திரங்களுக்கும் சாட்சி கையெழுத்து போட்டவர்கள் ஒரே நபர்கள் என்றால் இல்லை. 2, 5 பிரதிவாதிகளுக்கு திவ்யா, சௌம்யா என்று 2 வாரிசுகள் உண்டு என்றால் ஆமாம்.

**வழக்கறிஞர் வேண்டுகோளிற்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.**